## இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை – 2016

-----------------------------------------------------------------------------------------------

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, ஒதுக்கங்களிலான மாற்றங்கள் கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 17 ஆம் இலக்க இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை அதிகாரச்சட்டத்தின் 24(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் உறுப்புரைக்கமைய நடைமுறையல்லாச் சொத்துக்கள் தொடர்பில் வருடாந்தம் பயன்படு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டிருக்காமையினால், ரூபா 5,390,000 கிரயமான 03 மோட்டார் வாகனங்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது ஆனால் மேலும் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதற்கமைய, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இற்கு அமைய எழுந்த மதிப்பீட்டு வழு திருத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பில் பணிக்கொடைக்கான ஏற்பாடு கணிப்பீட்டு பிழைகள் காரணமாக ரூபா 73,933 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கு செலுத்தவேண்டிய ரூபா 466,200 தொகை கணக்காய்வுக் கட்டணம் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்த வேண்டிய ஊக்குவிப்புப் படிகளாக காட்டப்பட்டிருந்த ரூபா 2,131,120 தொடர்பில் செலுத்த வேண்டியவர்களின் பெயர்கள், செலுத்தவேண்டிய பெறுமதி மற்றும் தொடர்புடைய ஏனைய விபரங்கள் போன்ற விடயங்களை உள்ளடக்கிய விபரமான பதிவேடொன்று கணக்காய்விற்கு கிடைக்கக் கூடியதாக மேற்கொள்ளப்படவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

1996 இன் 17 ஆம் இலக்க இலங்கை சமுதாய பாதுகாப்புச் சபை அதிகாரச்சட்டத்தின் 15(2) பிரிவின் படி, ஏதேனும் பங்களிப்பாளர் அவர்க்கு வழங்கப்பட்ட கொள்கைகளின் கீழ் பயன்களினை இழக்கின்ற வேளையில், அது நடைமுறைப்படுத்தப்படுவதாக அறிவிப்பு ஒன்றினை அவ்வாறான பங்காளிப்பாளர்க்கு சபை விநியோகிக்கும். எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 யூலை வரை செயலற்ற பங்களிப்பாளர்கள் இனங்காண முடியாதிருந்தமையினால், அது தொடர்பாக அவர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,596,828 பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது ரூபா 705,269 பற்றாக்குறையொன்றினை விளைவித்திருந்தமையினால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகள் ரூபா 891,559 இனால் சிறிய அதிகரிப்பொன்றினை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 4,174,472 இனால் குறைவடைந்த போதிலும், செலவினம் ரூபா 5,066,029 இனால் குறைவடைந்தமை மேற்குறித்த அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக தாக்கமளித்திருந்தன.
மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது, 2012 ஆம் ஆண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 18,535,954 ஆன பற்றாக்குறையொன்று காணப்பட்ட போதிலும், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிதிசார் மிகையொன்றிற்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அது மீண்டும் பற்றாக்குறையொன்றிற்கு மாற்றப்பட்டது. எவ்வாறாயினும், ஊழியர்களின் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கவனத்தில் கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டில் சபையின் பங்களிப்பு ரூபா 48,284,602 ஆகக் காணப்பட்டதுடன் விலகல்களுடன் முன்னேற்றமடைந்து 2016 ஆம் ஆண்டில் அது ரூபா 102,558,470 ஆகக் காணப்பட்டது.

## 4. செய்ற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1996 இன் 17 ஆம் இலக்க இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை அதிகாரச்சட்டத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம், மீன்பிடி மற்றும் விவசாய துறைகள் அற்ற சுயதொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டமொன்றினை ஸ்தாபிப்பது மற்றும் அதனை நிர்வகித்தல் மற்றும் முகாமை செய்தல் என்பன சபையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பிரதான செயற்பாடுகளாகக் காணப்பட்டன.

2016 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய சபையின் செயலாற்றல் மதிப்பீட்டின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சிக்கனம் மற்றும் வள முகாமைத்துவத்தின் நன்மைகளினை சுயதொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கு மற்றும் சுயதொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களின் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுதல் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் ‘‘சுரக்குமா’’ மற்றும் ‘‘அரசவ்வ’’ பெயர்களினுடைய 02 திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், ‘‘சுரக்குமா’’ திட்டத்திற்கு 9,737 பங்களிப்பாளர்களும் மற்றும் ‘‘அரசவ்வ்’’ திட்டத்திற்கு 62,614 பங்களிப்பாளர்களையும் உள்ளடக்கி 2016 ஆம் ஆண்டில் 72,351 புதிய பங்களிப்பாளர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தனர். அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பதிவுசெய்யப்பட்டவர்களின் சதவீதம் 35 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

(இ) பதிவுசெய்யப்பட்ட புதிய பங்களிப்பாளர்களில், 61,389 பங்களிப்பாளர்களுக்கு பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் பதிவு செய்யப்பட்ட பங்களிப்பாளர்களுக்கான பத்திரங்கள் விநியோகம் முன்னைய ஆண்டிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, சபையின் ஓய்வூதியங்கள் திட்டத்தின் பங்களிப்பாளர்களுக்கு பத்திரங்களினை விநியோகிப்பதில் தாமதத்துடன் மேற்குறிப்பிடப்பட்ட பங்களிப்பாளர்கள் மற்றும் செயலற்ற பத்திரதாரர்களின் பாதுகாப்பில் குறைந்த மட்டமொன்றிலான இருப்பை ஏற்படுத்தியுள்ளது.

(ஈ) 2016 திசெம்பர் 31 இல் சபையினால் ஓய்வூதியத் திட்டங்களுக்கு பதிவுசெய்யப்பட்ட பங்களிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கை 565,645 என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவற்றில், 2014 திசெம்பர் 31 இல் செயலற்ற பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 288,234 அல்லது 51 சதவீதமாக இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயலாற்றலில் வருடாந்த அதிகரிப்பு போக்கொன்று காணப்படுகின்றது. ஆனால், அவ் திட்டத்தினுள் பங்களிப்பாளர்களினை வைத்திருப்பதற்கு சபையினால் குறைந்தபட்ச மட்டத்திலான கவனஞ் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை ஓய்வூதியத்திட்டங்கள் நிதி பங்களிப்புக்களின் பெறுகையில் குறைவும் ஓய்வூதிய செலுத்துகைகளில் அதிகரிப்பொன்றும் அவதானிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் பங்களிப்புக்களின் மொத்த பெறுகை ரூபா 161,869,987 தொகையாகக் காணப்பட்டதுடன் பங்களிப்புக்கான மொத்த செலுத்துகைகள் ரூபா 275,912,936 தொகையாகக் காணப்பட்டமையினால் ஓய்வூதியங்களின் செலுத்துகைக்கு தேவையான தொகையிலிருந்து பெறுகைகளின் 70 சதவீதத்தினை மாத்திரம் பிரதிநித்துவப்படுத்துகின்ற பங்களிப்புக்களிலிருந்து உள்ளடங்கியிருந்தது. 2016 திசெம்பர் 31 வரை ஓய்வூதியங்களின் நிதியின் மீதி ரூபா 1,988,765,922 தொகையாகக் காணப்பட்டதுடன் அத்திகதியில் சபையின் மொத்த முதலீட்டு பெறுமதி ரூபா 1,878,365,869 தொகையாகக் காணப்பட்டது. அதன் பிரகாரம், ஓய்வூதியம் செலுத்துவதற்கு போதியளவு நிதி சபையில் நிறுத்தி வைத்தல் தொடர்பாக கவனமொன்று செலுத்தப்பட்டிருந்ததா என்பதை புறக்கணிக்க முடியாதிருந்தது.

(ஊ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் உறுப்புரிமை ரத்து மற்றும் பங்களிப்புக்களின் மீள் செலுத்துகை முறையே 1,587 க்கு ரூபா 24,444,852 மற்றும் 2,189 க்கு ரூபா 38,481,516 ஆகக் காணப்பட்டது. ஆகையினால், உறுப்புரிமையை ரத்து செய்வது பாரிய எண்ணிக்கையாகக் காணப்பட்டதுடன் பணத்தினை மீளப்பெறும் போக்கொன்றும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும், பங்களிப்பாளர்களினை தக்கவைத்துக் கொள்வதற்கு முறைமையொன்று சபையினால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. பங்களிப்புக்களின் வருமதியினை பங்களிப்பாளர்களுக்கு அறியப்படுத்துவதற்குத் தவறியமை இந்த போக்கு அதிகரிப்பதற்கு பிரதான காரணமாகக் காணப்பட்டது.

(எ) பங்களிப்புக்களிலிருந்து சேகரிக்கப்பட்ட பயன்களின் செலுத்துதல் தவிர தலைவரின் வாகன வாடகையாக ரூபா 1,317,500 மற்றும் சான்றிதழ் விழா ரூபா 4,202,103 உள்ளடக்கிய ரூபா 5,519,603 கூட்டுத்தொகையான செலவினம் காரணமாக நிதியத்தின் பங்களிப்பு குறைவடைந்திருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஓய்வூதியங்களின் நிதி செலுத்துகை பங்களிப்பாளர்கள் பதிவுசெய்யப்பட்டதிலிருந்து 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் கணனி முறைமைக்குள் தகவல்களினை பதிவு செய்வதற்கு தவறியமையினால், ஓய்வூதியங்கள் நிதியிலிருந்து 2014 ஆம் ஆண்டில் ரூபா 23,947,068 தொகையொன்று செலவழித்து, சபையினால் புதிய கணனி முறைமையொன்று நிறுவப்பட்டிருந்தது. செயற்பாட்டில் பின்வரும் குறைபாடுகள் மற்றும் பிரச்சனைகள் எழுந்தன.

(i) ஓய்வூதிய தொகுதியினூடாக செயலாற்றல் மற்றும் செயலிலுள்ள பங்களிப்பாளர்களின் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் 60 வயதினை பூர்த்தி செய்துள்ள பங்களிப்பாளர்களினை இனங்காண்பதற்கு தவறியமை.

(ii) பழைய மற்றும் புதிய கணனி முறைமைகள் இரண்டையும் செயற்படுத்துவதன் காரணமாக அறிக்கைகளினை பெறுவதில் பிரச்சினைகள்.

(iii) ஓய்வூதியங்கள் மற்றும் ஊக்குவிப்புபடிகளின் செலுத்துகை தொடர்பில் முற்திட்டம் மற்றும் தரவு தயாரித்தல் ‘‘அரஸவ்வ்’’ (Arassawa) பங்களிப்பு பிரயோகத்தினை கணனிமயப்படுத்துவதற்கு தவறியமை.

(iv) குறிப்பிடப்பட்ட பங்களிப்பு இலக்கமொன்றுடன் தொடர்புடைய தவணையொன்றினை கணனிமயப்படுத்தும் போது, ஒரு பெறுகை ஒரு பங்களிப்பாளர்க்கு அல்லது அதேசமயம் பல பங்களிப்பாளர்க்கு கணனிமயப்படுத்த முடியும். ஆகையினால், விஷேடமாக வங்கிகளினூடாக தவணைப் பணங்களினை செலுத்துகின்ற பங்களிப்பாளர்கள் தவணைப் பணங்களினை உண்மையாகச் செலுத்தாது பங்களிப்புக்களினை இடைநிறுத்தல் மற்றும் ஓய்வூதியங்களின் பெறுகையில் செலுத்தப்படாதுள்ள தொகையொன்றை மீளப்பெறுவதில் தொடர்ந்தும் உயர் இடரொன்றின் சாத்தியமொன்று காணப்படுகின்றது.

(v) காணப்படுகின்ற கணனிமயப்படுத்தப்பட்ட பிரயோகங்களின் முறைமையின் படி, 9 அடையாள இலக்கங்கள் மாத்திரம் உட்புகுத்த முடியும். எவ்வாறாயினும், தற்போதுள்ள புதிய அடையான அட்டையின் படி, 12 இலக்கங்கள் உட்புகுத்த வேண்டும். ஆகையினால், இவ் கணனி முறைமையில் அந்த வசதியினை உட்புகுத்துவது இயலாது காணப்படுகின்றது.

(ஆ) மேற்குறித்த குறைபாடுகளினை தவிர்ப்பதற்கு புதியதொரு கணனி முறைமையின் நிறுவுகைக்கு மூலதன ஏற்பாடுகளிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 2,550,946 தொகையொன்று நிறுத்திவைக்கப்பட்டிருந்த போதிலும் 2017 யூலை 20 வரை அந்த கணனி முறைமையினை பெறுவதற்கான நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டிலிருந்து பிரதேச செயலகங்கள் மற்றும் அமர்வு ஒன்றுகூடல் சபைகளினூடாக பதிவுசெய்த பங்காளர்களினை சரியாக இணங்காண்பதற்கு தரவு முறைமையொன்று செயற்படுத்தப்பட்டிருக்காமையினால், அந்த நோக்கத்திற்காக பங்களித்த உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புபடிகள் செலுத்தவேண்டிய ஊக்குவிப்புக்கள் படியாக ரூபா 2,131,120 ஏற்பாடொன்று நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2004 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை வங்கிகளில் நேரடியாக வைப்பிலிட்ட பங்களிப்பாளர்களிடமிருந்து ரூபா 1,261,347 உள்ளடக்கிய ரூபா 9,572,342 மொத்த தொகையொன்று பெறப்பட்டிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை அவ்வவ்போது கணனி முறையின் செயற்பாடற்ற நிலைமை காரணமாக ரூபா 8,310,995 தொகையொன்று இணங்காணமுடியாத வைப்புக்களாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. அவை இணங்காணப்பட்டு தொடர்புடைய பங்களிப்பாளர்களின் கணக்குகளுக்கு செலவுவைக்கப்பட்டதன் காரணமாக பங்களிப்பாளர்களின் சரியான மீதிகளின் மீது பயன்களின் செலுத்துகைகள் செய்ய முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) தேவையான நிதிகளின் ஒதுக்கீடு மற்றும் பெறுகைகள் செயன்முறைகளினைப் பின்பற்றாது ரூபா 165,000,000 அரச மதிப்பீடுகளினை மிகைத்து சபையின் தலைமை அலுவலக செயற்பாட்டிற்கு கட்டிடமொன்றின் கொள்வனவுக்கு ஓய்வூதிய நிதியிலிருந்து ரூபா 195,000,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 180 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 160 ஆகக் காணப்பட்டமையினால், 20 வெற்றிடங்களினைக் கொண்டுள்ளது.

(ஆ) 03 வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கு பிரதி பொது முகாமையாளர் (நிதி) பதவி சபையில் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன், இந்த ஆட்சேர்ப்புக்கு ரூபா 72,677 தொகையொன்றினை செலவழித்து மீளாய்வாண்டின் ஏப்ரல் இல் செய்தித்தாள் விளம்பரமொன்று வெளியிடப்பட்டிருநுந்தது. எவ்வாறாயினும், 2017 யூலை 20 ஆம் திகதி வரையிலும் இந்த ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2014-2016 ஆண்டுகளுக்காக சபையினால் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்களாக பின்வரும் விடங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், அந்த பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்களினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) சரியான நேரத்தில் செயல்படல் மற்றும் சமூக தேவைகளின் படி திருத்தங்களினை மேற்கொள்ளுதல்.

(ஆ) சமூக பாதுகாப்பு தொடர்பில் தேசிய கொள்கை காணப்படாமை.

(இ) முன்மொழிவுத் திட்டங்களுக்காக அரசாங்கத்தின் பங்களிப்பு கிடைக்காமை.

(ஈ) தேவைகளுக்கு இணங்க தகவல் முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டிருக்காமை.

(உ) சபையிலுள்ள பங்களிப்பாளர்களுடன் தொடர்பு குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை மற்றும் பங்களிப்பாளர்களின் பதிவுக்கு பின்னரான தொடர் நடவடிக்கைகள் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை.

(ஊ) பங்களிப்பாளர்களின் செலுத்துகைகள், பணம் அனுப்புதல்கள் மற்றும் கணக்கீடு, பலவீனங்கள் மற்றும் இனங்காணப்படாத மீதிகள் என்பன உயர் மட்டமொன்றில் காணப்படுதல்.

## 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2016 ஒக்தோபர் 13 இல் பணிப்பாளர் சபைக்கு சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அங்கீகாரமும் பெறப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஒக்தோபர் இல், 07 பிரதான செயற்பாடுகள் மற்றும் 31 உப செயற்பாடுகளினை உள்ளடக்கியதாக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 02 மாத காலத்தினுள் அதனை பூர்த்தி செய்யமுடியாதிருந்தது. அதற்கமைய, சபையின் நோக்கங்களை அடைந்துகொள்ளக்கூடிய முறைமையொன்றில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீன்படி மற்றும் விவசாய துறைகள் அற்ற சுயதொழிலில் ஈடுபட்டுள்ள நார்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டமொன்றினை ஸ்தாபிப்பது சபையின் பிரதான நோக்கமாகக் காணப்பட்டது. அதற்கமைய, மீளாய்வாண்டிற்காக எதிர்பார்க்கப்பட்ட ஆட்சேர்ப்பு இலக்குகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே 15 சதவீதம் தொடக்கம் 91 சதவீதம் வரையிலான வீச்சில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையினால், பாதீடானது ஒரு வினைத்திறன் வாய்ந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாமையை சுட்டிக்காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றன.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்ககள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) பங்களிப்புக்களின் முகாமைத்துவம் | i. பங்பளிப்பாளர்களினை ஆட்சேர்ப்பு செய்யும்போது பத்திரங்களினை விநியோகிக்கையில் தாமதம் மற்றும் விநியோகிக்கப்பட்ட பத்திரங்கள் துல்லியமானதாகக் காணப்படாமை. |
| | ii. முடிவாகியுள்ள செயலற்ற பங்களிப்பாளர்களை அடையாளம் காண்பதற்கு தவறியமை. |
| | iii. வங்கிகளினால் சேகரிக்கப்பட்ட தவணைகளினை பதிவதற்கு பதிடுவதற்கும் திடமான முறைமையொன்று காணப்படாமை. |

| | |
|---|---|
| (ஆ) கணனிமயப்படுத்தல் | காணப்படுகின்ற கணனி முறைமை தேவைகளுடன் இணங்கியிராமை காரணமாக ஓய்வூதியத்தினை பெற்றுக்கொள்வதற்கு உரித்தான நபர்களினை அடையாளம் காண்பதற்கு தவறியமை. |